பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 12 | வெள்ளிக்கிழமை | 29.09.2023 | அதிர்வு 59

## தலைமைப் பதவியை துறக்கிறாரா மஹிந்த?



ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் வருமா என அக்கட்சியின் தலைவர் 02



# உயிர் அச்சுறுத்தல், அழுத்தங்களால் முல்லைத்தீவு நீதிபதி பதவி துறப்பு!

## நாட்டைவிட்டு வெளியேறிக் கனடாவில் தஞ்சம்

-சீ.ஏ.தமிழ்மாறன்-

உயிர் அச்சுறுத்தல் மற்றும் தொடர்ச்சியான அழுத்தங்கள் காரணமாகத் தான் வகித்து வந்த நீதிபதிப் பதவி மற்றும் பொறுப்புக்கள் அனைத்தையும் விட்டு விலகியுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா. அதேவேளை, அவர் நாட்டை விட்டும் வெளியேறிக் கனடாவில் தஞ்சமடைந்துள்ளார். 02

# முல்லை. நீதிபதியின் பதவி விலகல் நீதித்துறைக்கு விழுந்த சம்மட்டியடி!

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு



“முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா, தன் மீது தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டு வந்த அழுத்தங்கள் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக, தனது பதவியையும், பொறுப்புகளையும் துறந்துள்ளமை, இந்தநாட்டின்நீதித்துறையினதுசுயாதீன இயங்குநிலையை அடியோடு ஆட்டம் காணச் செய்துள்ளது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்று மாலை தாம் விடுத்த அறிக்கையில் 02

# நாடாளுமன்றில் இனித் தனி வழி

## டி.ரி.என்.ஏ. தீர்மானம்; ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரைக் களமிறக்கவும் முடிவு




– எஸ்.நிதர்ஷன் –

நாடாளுமன்றத்தில் தனித்துச் செயற்படவும் அடுத்துவரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானம் எடுத்துள்ளது எனத் தெரியவருகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் 06




வெளியுறவுக் கொள்கை என்பது ‘எடுத்தேன், கவிழ்த்தேன்’ என்று கையாளப்படக் கூடியதல்ல. நிதானமாகவும் பொறுமையாகவும் ராஜதந்திரத்துடனும் அணுகப்பட வேண்டியது.

அந்தப் பொறுப்புணர்வோடு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி விடயங்களைக் கையாளுபவராகத் தெரியவில்லை.

அரசியலுக்கு – ஜனநாயக அர 02

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சியலுக்கு – சர்வதேச ராஜதந்திர அரசியலுக்கு – அவர் புதிய முகம். அனுபவப்பட்டவர் அல்லர்.

ஒரு கிராம சபைத் தேர்தலைக் கூட வாழ்வில் எதிர்கொள்ளாத வெறும் இராணுவ அதிகாரி நேரடியாக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு ஜனாதிபதியானதின் விளைவை நாடு இரண்டு ஆண்டுகளுக்குள் எதிர்கொண்டது. அவரே பதவியை விட்டு ஓட்டம் பிடிக்க வேண்டியவரானார்.

அவரின் சட்டத்தரணி என்ற தகுதியைத் தவிர, அரசியலில் முன்பின் எந்த அறிமுகமும் இல்லாமல் நாடாளுமன்றுக்குள் பின் கதவால் நுழைந்தவர் அலி சப்ரி. தனது சட்டத்தரணியைத் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக்கி, அமைச்சர் பதவியையும் வழங்கி, அழகு பார்த்தார் கோட்டாபய.

'கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் இலங்கை நாடு சிங்கப்பூராகப் போகின்றது' என்று பகிரங்கமாகப் பீற்றினார் அலி சப்ரி. கடைசியில் நாட்டை நடுவீதியில் விட்டுவிட்டு, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று நாட்டை விட்டே ஓடித்தப்பினார் கோட்டாபய.

'கோட்டாபயவின் ஆட்சியில் இலங்கை தேசம் சிங்கப்பூர் போன்று மாறும்' – என்ற அலி சப்ரியின் பேச்சை, சமூக ஊடகங்கள் இப்போதும் அடிக்கடி வெளியிட்டு, நினைவூட்டி, அவரை நையாண்டி பண்ணத் தவறுவதில்லை. அவரது அரசியல் அறிவு அம்மட்டுத்தான்.

வெளிவிவகார அமைச்சராக அவர் இப்போது பண்ணியிருக்கும் ராஜதந்திரம் சந்தி சிரிக்கின்றது.

அணிசேராக் கொள்கை என்ற பெயரில் 'மீனுக்குத் தலையையும், பாம்புக்கு வாலையும் காட்டும் விலாங்கு போல்' தந்திரம் பண்ணி, ராஜதந்திரம் செய்து வந்த இலங்கையை, இப்போது விடயம் புரியாமல் நடுவீதிக்குக் கொண்டு வந்திருக்கிறது அலி சப்ரியின் ராஜதந்திரம்.

இந்தியா – கனடா இடையிலான ராஜதந்திர சமரில் இடையில் மூக்கை நுழைத்துக் கொண்டு, இலங்கையின் சார்பில் அலி சப்ரி கனடாவை 'பயங்கரவாதிகளின் சுவர்க்கம்' அல்லது 'சரணாலயம்' என்று அறிவித்திருக்கின்றார்.

"கனடாவில் பயங்கரவாதிகள் புகலிடம் புகுந்துள்ளனர். இந்தியாவுக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைக் கனடாப் பிரதமர் சுமத்தியுள்ளார். அதைத்தான் அவர்கள் (கனடா தரப்பினர்) இலங்கைக்கும் செய்தனர். எங்கள் நாட்டில் (இலங்கையில்) இனவழிப்பு நடக்காத போதும், அது நடந்ததாகக் கனடா குற்றம் சாட்டியது" – என்று கனடாவை சுரண்டியிருக்கின்றார் இலங்கை வெளிவிவகார அமைச்சர்.

ஒரு வகையில் அவரின் கூற்று இலங்கைத் தமிழர்களுக்கு சாதகமானது. இலங்கையில் இனவழிப்பு நடந்தது என்பதை நிரூபிக்கும் கடப்பாடு இப்போது கனடாவுக்கும் சேர்ந்து ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் பேரினவாதத்தின் அதிக அழுத்தம் காரணமாக சுயாதீனமாக செயல்பட முடியாத நிலையில் நாட்டை விட்டு வெளியேறிய நீதிவான் சரவணராஜா இப்போது கனடாவில் தஞ்சம் புகுந்திருக்கிறார் என ஒரு தகவல் தெரிவிக்கிறது. அவரது அனுபவங்களைக் கனடா பகிரங்கமாக வெளியிடும் போது பயங்கரவாதிகளின் புகலிடம் எது என்பதை அலி சப்ரியே புரிந்து கொள்வார் என நினைக்கிறேன்.

## முல்லை. நீதிபதியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"நீதிபதி சரவணராஜா கடந்த 2023.07.04 ஆம் திகதி தனது கடமை நிமித்தம் குருந்தூர்மலைக்கு விஜயம் செய்திருந்தபோது தெரிவித்த கருத்துக்களை மேற்கோள்காட்டி 2023.07.07 ஆம் திகதிய நாடாளுமன்ற உரையிலும், அதன்பின்னர் பொதுவெளியிலும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியை, நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர அவதூறுக்கு உள்ளாக்கியிருந்தார்.

அதன்பின்னர் குருந்தூர்மலையில் தமிழர்கள்வழிபாடியற்றுவதற்கு, சட்டவரன்முறைகளுக்கு உட்பட்டு நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தீர்ப்பினை மாற்றும் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்தில் பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி பதவி விலகியுள்ளமை இந்த நாட்டின் நீதித்துறைக்கும், ஜனநாயகத்துக்கும் விழுந்திருக்கிற சாட்டையடி மட்டுமல்ல, இதை மிகமோசமான இனவாதச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இதற்கு, எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றேன்.

2000ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதியாக இருந்த திருமதி.சிறீநிதி நந்தசேகரன் மீது, இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியை அடியொற்றி, மீளவும் வடக்கின் தமிழ் நீதிபதி ஒருவர் மீது பகிரங்கமாக மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தகையதொரு உயிர் அச்சுறுத்தல், இலங்கையின் நீதித்துறையின் இயங்குநிலையும் மெல்லமெல்ல இராணுவமயப்படுத்தப்படுவதற்கான எத்தனமாகவே தென்படுகின்றது.

நீதித்துறையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இந்த நாட்டில், இன, மத ஆக்கிரமிப்புகளும், அடக்குமுறைகளும் எத்தனை வீரியமாய் இருக்கும் என்பது பற்றி, சர்வதேச சமூகம் இனியேனும் கூருணர்வோடு செயலாற்ற வேண்டும் என்றும், இத்தகையதொரு நிலை, இன்னுமோர் தமிழ் நீதிபதிக்கு ஏற்படாதிருக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்." – என்றுள்ளது.

## தலைமைப் பதவியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், அதற்கு அவர் நேரடிப் பதிலை வழங்கவில்லை.

"மொட்டுக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் வரவுள்ளது என சமூக ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியுள்ளனவோ.?" என எழுப்பப்பட்ட கேள்விக்கு,

"அப்படி எதுவும் எனக்கு அறியக் கிடைக்கவில்லை. மாற்றம் தேவை இல்லை. ஆனால், எந்நாளும் மாற்றம் இல்லாமல் இருக்கவும் முடியாது." – என்று மஹிந்த பதிலளித்துள்ளார்.

## உயிர் அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணைகளின்போது தன்னால் வழங்கப்பட்ட கட்டளைகளுக்கு எதிராகவே தான் உயிர் அச்சுறுத்தலையும், தொடர்ச்சியான அழுத்தங்களையும் எதிர்கொண்டார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தனது பதவி விலகல் கடிதத்தை நீதிச் சேவைகள் ஆணைக் குழுவுக்கு அவர் அனுப்பிவைத்துள்ளார்.

தனது பதவி விலகல் தொடர்பில் கனடாவில் வைத்து தமிழ் ஊடகவியலாளர் ஒருவரிடம் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"குருந்தூர்மலை வழக்கில் நான் வழங்கிய கட்டளைகளை மாற்றியமைக்குமாறு தொடர்ச்சியாக அரச தரப்பால் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர மற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் எனக்கு அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

அண்மையில் எனக்கான (நீதிபதிக்கான) பொலிஸ் பாதுகாப்பும் குறைக்கப்




பட்ட அதேவேளை, புலனாய்வாளர்கள் தொடர்ச்சியாக என்னைக் கண்காணித்து வந்தனர்.

சட்டமா அதிபர், என்னை (முல்லைத்தீவு நீதிபதியை) தனது அலுவலகத்தில் 21.09.2023 ஆம் திகதியன்று சந்திக்க வருமாறு அழைத்து, குருந்தூர்மலை வழக்கின் நீதிமன்றக் கட்டளைகளை மாற்றியமைக்கும்படி அழுத்தம் பிரயோகித்தார்.

குருந்தூர்மலை வழக்குடன் தொடர்புபடுத்தி எனக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எனது தனிப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்டு இரண்டு வழக்குகள் கோப்பிடப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் எனக்கு நேர்ந்த உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக நான் மிகவும் நேசித்த எனது நீதிபதிப் பதவிகள் அனைத்தையும் துறந்துள்ளேன்.

இது குறித்த பதவி விலகல் கடிதத்தை கடந்த 23.09.2023 ஆம் திகதியன்று அன்று பதிவுத் தபால் ஊடாக நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளேன்." – என்றார்.

## + பயங்கரவாதத் தடைச் சட்டம்
## + பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம

# கொடிய சட்டங்கள் அறவே வேண்டாம்

## விக்னேஸ்வரன் வலியுறுத்து



**- எஸ்.நிதர்ஷன்-**

**"பயங்கரவாதத் தடைச் சட்டமோ அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ தேவையற்றது. மக்களைப் பாதிக்கும் இந்தக் கொடிய சட்டங்கள் சட்டப் புத்தகத்திலே இருக்கத் தேவையில்லை."**

**- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

தன்னுடைய பதவிக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாமென்ற பயம் ஜனாதிபதிக்கு இருக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும். தெரிவித்ததாவது:-

"பயங்கரவாதத் தடைச் சட்டமோ அல்லது அதற்குப் பதிலாகக் கொண்டு வரப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ இலங்கைக்குத் தேவையில்லை.

ஏனெனில் கடந்த காலத்தில் ஜே.வி.பி. கிளர்ச்சியின்போது - 1978 ஆம் ஆண்டு தற்காலிகமாகக் கொண்டு வரபட்டதே பயங்கரவாதத் தடைச் சட்டம். அது சில காலம் மட்டும்தான் எனக் கூறித் தற்காலிகமாகக் கொண்டு வந்திருந்தாலும் 44 ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கின்றது.

ஆகவே பயங்கரவாதத் தடைச் சட்டமோ அல்லது எதிர்ப்புச் சட்டமோ தேவையற்றது. இந்தச் சட்டத்தால்தான் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். எனவே, இப்போது

அது தேவையற்ற சட்டம்தான்.

எனினும் பயங்கரவாதம் நாட்டில் இருப்பதாகச் சொல்லி புதிய புதிய சட்டங்களை அரசுக்கு ஆதரவாகக் கொண்டு வருகின்றனர். ஏனெனில் அரசை எதிர்க்கின்றபோது அதனைத் தடுத்து நிறுத்துவ-தற்கு அல்லது அடக்கி ஒடுக்குவதற்கு அல்லது தண்டனை வழங்குவதற்காக இந்தச் சட்டங்களைக் கொண்டு வருகின்றனர்.

ஆகவே எம்மைப் பொறுத்த வரையில் பல சாதாரண சட்டங்கள் இருக்கின்றபோது அதனைப் பயன்படுத்துவதை விடுத்து இத்தகைய கொடிய சட்டங்கள் தேவையற்றது.

அரசைப் பொறுத்த வரையில் எமது மக்களைப் பயப்படுத்தி - கஷ்டப்படுத்தி தமது எதிரிகளை வேறு விதமாகக் கையாளும் வகையில் இத்தகைய சட்டங்களைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்தாலும் அந்தச் சட்டங்கள் என்பது சட்டப் புத்தகத்திலே இருக்கத் தேவையில்லை என்றுதான் கூறுகின்றோம்.

அதேநேரத்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற புதிய சட்டத்தைக் கொண்டு வருவதும் பின்னர் விடுவது அல்லது தாமதிப்பது என மாறி மாறி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். அதிலும் அரச தரப்பில் ஜனாதிபதி ஒரு கட்சியாகவும், ஏனையவர்கள் மற்றொரு கட்சியாகவும் இருக்கின்றனர். இதனாலேயே இந்த இழுபறி ஏற்பட்டு இருக்கலாம். ஆனாலும் இதனைக் கொண்டு வருவது தேவையற்றது தான்.

மேலும் இரு தரப்புப் பிரச்சினைகளாலும் தன்னுடைய பதவிக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பயம் ஜனாதிபதிக்கு இருக்கும். ஆகையினால் அதிகாரத்துடன் பதவில் இருப்பதற்காகவும் இந்தச் சட்டத்தை இழுத்து இழுத்து பயன்படுத்தலாம்." - என்றார்.

# நில்வள கங்கை பெருக்கெடுத்தமையால் மொரவக்கயில் வீடுகளுக்குள் வெள்ளம்!



நில்வள கங்கை பெருக்கெடுத்ததால் மொரவக்க - போருபிட்டிய பிரதேசத்தின் சில பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

போருபிட்டிய பிரதேசத்தில் 8 வீடுகள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளமையால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

இதேவேளை, தெனியாய - அக்குரஸ்ஸ பிரதான வீதியின் ஒரு சில இடங்கள் நீரில் மூழ்கியுள்ளமையால் போக்குவரத்தை முன்னெடுப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

மொரவக்க - பரகடுவ பிரதான வீதியின் நில்வலா கங்கைக்கு குறுக்கே அமைக்கப்பட்டுள்ள பரகடுவ பாலத்தின் அடைப்பைச் சுத்தம் செய்யும் பணியில் பிரதேச மக்கள் ஈடுபட்டனர்.

மொரவக்க - நெலுவ பிரதான வீதி முற்றாக நீரில் மூழ்கியுள்ளதோடு, இப்பாதையூடான போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

இதேவேளை, மொரவக்க சந்தைக்கு அருகில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

# நாணய நிதியத்தின் 2 ஆவது தவணைக் கடனை பெற்றுக்கொள்வது தொடர்பில் சாதகமான பேச்சு

## பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தகவல்

**சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது தவணைக் கடனை பெற்றுக்கொள்வதற்கான பேச்சுக்கள் சாதகமான முறையில் இடம்பெற்று வருகின்றன என பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

**அத்துடன், அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் படும் பொருளாதார மறுசீரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது என்றும் அவர் தெரி வித்துள்ளார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே செஹான் சேமசிங்க மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரி விக்கையில் –




நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கி யின் பங்கேற்புடன் அண்மையில் சர்வ தேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பிரதிநிகள் குழு நீண்ட கலந்துரையா டலில் ஈடுபட்டது.

இதுவரையில் மேற்கொள்ளப்பட்டி ருக்கும் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடு கள் மற்றும் நீடிப்பு செயற்பாடுகளுக்கு பாராட்டு தெரிவித்த சர்வதேச நாணய நிதி யக் குழுவினர், அந்த செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கும் பாராட்டு தெரிவித்த னர்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத் துடனான செயற்குழு மட்டத்திலான இணக்கப்பாட்டை விரைவில் எட்ட முடி யும் என்ற நம்பிக்கை அரசாங்கத் திற்கு உள்ளது. அதற்காக வரி சேக ரிப்பு செயற்பாடுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்த்திருத்தங்கள் மற்றும் வரி செலுத்தாமல் இருப்போரை கண்டறிவ தற்கான வேலைத்திட்டம் என்பன குறித் தும் சர்வதேச நாணய நிதியக் குழுவி னர் ஆலோசனைகளை வழங்கியிருந்த னர்.

மேலும் இந்தப் பேச்சுக்கள் தொடர்பி லான தவறான எண்ணங்களை பரப்ப சிலர் முயற்சித்து வருகின்றனர். மேற் படி வேலைத்திட்டத்தின் கீழ் இன்னும் பல செயன்முறைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கையின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் முழுமையாக நிறை வடைந்துள்ளன. இந்த நிலையில், வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் இலங்கைக்கு ஒத் துழைப்பு வழங்குவதற்காக இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைத் தலைமைத்துவம் வகிக் கும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள் ளது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இலங்கைக்கு சில நாடுகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று போலியான விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், இலங்கைக்கு கடன் வழங்கிய நாடுகள் பலவும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளின் முன்னேற்றகரமான பேச்சுகளில் தொடர்ச்சியாகப் பங்களிப்புச் செய்து வருகின்றன.

மறுமுனையில், நாட்டின் பணவீக் கம் 1.3 ஆக குறைவடைந்துள்ளமை மற்றும் கையிருப்பு அதிகரித்துள்ளமை, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர் களின் பணம் அனுப்பும் செயற்பாடுகள் சுமூகமான நிலைக்குத் திரும்பியுள்ளமை, நாட்டின் அடிப்படைக் கணக்கின் வைப்புத் தொகை அதிகரித்துள்ளமை என்பன மகிழ்ச்சிக்குரியவை. இருப்பினும் அரசாங் கத்தின் வருமானம் 48 வீதமாக அதிக ரித்துள்ள நிலையில், செலவீனம் 38 வீதமாக அதிகரித்துள்ளது.

கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் இடம்பெற்று வரும் காலப்பகுதியில் கடன் செலுத்துவதற்கு தவணைகளை செலுத் துவதற்கு மாறாக பெருமளவில் வட்டிப் பணத்தை செலுத்த நேர்ந்துள்ள மையே அரச செலவீனங்கள் அதிகரிக்க காரணமாகியுள்ளன. எவ்வாறாயினும், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழான பொருளாதார மறுசீரமைப்புக் களின் பலனாக எதிர்வரும் பண்டிகை காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் வலுவான நிலைமையை அடையும் என்றும் நம்பிக்கை உள்ளது.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மறுசீரமைப்புக்களை 20 வருடங்களுக்கு முன்பாகச் செய்திருக்கும் பட்சத்தில் நாடு வலுவான நிலைமை அடைந்திருக்கும். அதன்படி அபிவிருத்தி அடைந்த நாடுகள் பின்பற்றிய அனைத்து படிமுறைகளையும் அரசாங்கம் பின்பற்றி வருகின்றது.

இவ்வாறான நிலைமைகளுக்கு மத்தியில் இந்த நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால், அதனால் தமது அரசியல் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என கருதுகின்ற சிலர் தவறான கருத்துக்களை பரப்ப முற்படு கின்றனர். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவனை கடன் இலங்கைக்கு கிடைக்காது என எவரும் குறிப்பிடவில்லை.

மறுமுனையில் பொருளாதாரத்திற் கான இயற்கை வளங்கள் அற்ற நாடுக ளின் வரி அறவீட்டு குறிகாட்டியில் இலங்கை மிக குறைந்தளவில் வரி அறவிடும் நாடாக பெயரிடப்பட்டுள்ளதால், வரி அறவீட்டுக்கான மென்பொருளை புதுப்பித்து வரி சேகரிப்பு பணிகளை சீரான முறையில் முன்னெடுக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையில் மீண்டும் ஒரு பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படாது என்ற உறுப்பாட் டினையை சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கின்றது.

அத்தோடு, அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்திற்கு முன்பாக நாட்டின் பல்வேறு பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி தடை நீக்கப்படும். அதேநேரம் பொதுப்போக்குவர்துக்கான வாகனங்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடு அவசியம் என்றும் மற்றைய வாகனங்கள் மீதான இறக்குமதி தடையை நீக்கும் எண்ணம் தற்போதைக்கு இல்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

# யாழில் முறிந்து வீழ்ந்த பாரிய மரம் காயங்களுடன் தப்பிய ஓட்டோ சாரதி





– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம் பொது நூலகத்துக்கு முன்பாக பாரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் காயமடைந்து தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 3.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ். பொது நூலகத்துக்கு முன்னாலுள்ள யாழ். மாநகர சபையின் சிறுவர் பூங்காவில் பாரிய பல மரங்கள் காணப்படுகின்றன.

இந்தப் பூங்காவுக்குள் இருக்கின்ற மரங்களின் கீழ், வீதியால் செல்கின்ற பொதுமக்களும் வாகனங்களுடன் அந்த வாகனங்களின் சாரதிகள் பலரும் நிழலுக்காகத் தங்கி நிற்பதும் தரித்து நிற்பதும் வழமையாகும்.

இந்தநிலையில் நேற்றும் குறித்த மரத்தின் கீழ் நிழலுக்காக ஓட்டோவில் அதன் சாரதியும் தங்கி நின்றிருந்தார்.

அப்போது அடித்த பலமான காற்றால் நீண்ட கால பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்துள்ளது.

அங்கு நின்றிருந்த ஓட்டோவின் மேல் மரம் முறிந்து வீழ்ந்ததில் ஓட்டோ முழுவதும் சேதமடைந்ததுடன் அதன் சாரதி காயங்களுடன் தப்பியுள்ளார்.

# யாழில் நெல் விதைப்பு ஆரம்பம்





– எஸ்.நிதர்ஷன் –

யாழ்ப்பாணம், செம்மணிப் பகுதியில் பெரும்போக நெற் செய்கைக்கான நெல் விதைப்பு விழா ஆரம்பமானது.

சமய சம்பிரதாயப்படி பெரும் போகத்துக்கான நெல் விதைப்பு விசேட வழிபாடுகளின் பின்னர் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் பெருமளவிலான விவசாயிகள் பெரும்போகத்துக்கான நெல் விதைப்பில் ஈடுபட்டதுடன் தமது வயல் நிலங்களைப் பன்படுத்தியதுடன், வரம்பு கட்டலிலும் ஈடுபட்டனர்.

# திருமலையில் கரடி தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் காயம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை – திரியாய் காட்டுப் பகுதியில் விறகு வெட்டுவதற்காகச் சென்றவர் கரடியின் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கஷ்ட நிலைமை காரணமாக விறகு வெட்டுவதற்காகக் காட்டுக்குச் சென்ற போது, விழுந்து கிடந்த மரத்துக்குக் கீழால் உறங்கிக் கொண்டிருந்த கரடி, அவர் மீது பாய்ந்து தாக்கியதால் தலை மற்றும் முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

கும்புறுபிட்டி – நாவல்சோலை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான என். செல்வராசா (வயது 41) என்பவரே இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

இந்தப் பிரதேசத்தில் கரடிகளின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

படுகாயமடைந்த குறித்த நபர் சுய நினைவற்ற நிலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சந்தி சிரிக்கும் நீதித்துறை

இலங்கையின் நீதித்துறை சரித்திரத்தில் மற்றொரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றார் முல்லைத் தீவு நீதிவான் ரி.சரவணனராஜா.

தன் உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் அதீத அழுத்தம் காரணமாக மாவட்ட நீதிபதி, நீதிவான், குடும்ப நீதிமன்ற நீதிபதி, ஆரம்ப நீதிமன்ற நீதிபதி, சிறுதொகைக் கோரிக்கைகளுக்கான நீதிமன்ற நீதிபதி, இளம் வயதினருக்கான நீதிமன்ற நீதிபதி ஆகிய பதவிகளில் இருந்து தாம் விலகுகின்றார் என்று கடந்த 23ஆம் திகதி நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்குப் பதிவுத் தபாலில் கடிதம் அனுப்பி விட்டு, அவர் நாட்டை விட்டே வெளியேறிவிட்டார் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

எப்போது அவர் பதவி விலகுகின்றார், யாரிடம் தமது பொறுப்புக்களை ஒப்படைக்கின்றார் என்ற அறிவித்தலைக் கூட ஆற,அமர இருந்து, வெளிப்படுத்த முடியாத இக்கட்டில் அவர் நாட்டை விட்டு ஓட்டம்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது.

குருந்தூர்மலை விவகாரத்தில் பேரினவாதத்தின் அழுத்தங்கள், அத்துமீறல்களுக்கு இடமளிக்காமல், புனித நீதித்துறையின் பணியை நீதி தேவதையின் ஸ்தானத்திலிருந்து ஆற்றியவர் அவர்.

குருந்தூர்மலை விடயத்தை ஒட்டி, சட்ட வரன்முறைகளுக்கு உட்பட்டு, நியாயபூர்வமாக வழங்கப்பட்ட தமது தீர்ப்பையும் உத்தரவையும் மாற்றம் செய்யுமாறு சட்டமா அதிபர் மட்டத்திலிருந்து பிரயோகிக்கப்பட்ட அழுத்தம் மற்றும் தொடர்ச்சியான அச்சுறுத்தல் காரணமாகவே அவர் பதவி விலக வேண்டி நேர்ந்துள்ளது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குறிப்பிட்டிருக்கின்றமை நோக்கப்பட வேண்டும்.

அவரது பதவி விலகல் சிறிதரன் எம்.பி. சுட்டிக் காட்டியபடி இந்த பௌத்த - சிங்கள தேசத்தின் நீதித்துறைக்கு விழுந்த சம்மட்டி அடியாகும். அது மட்டுமல்ல, சிங்கள தேசத்தின் நீதித் துறையின் முகமூடியையும் அது தோலுரித்துக் காட்டியே இருக்கின்றது.

சிங்கள தேசத்தின் நீதித்துறைக்கு இது ஒன்றும் பெரிய இழுக்கு அல்ல. துணிச்சலாகவும், நேர்மையாகவும், பக்கம் சாராமலும் செயல்பட்ட நாட்டின் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவையே பதவியில் இருந்து வலோற்காரம் மூலம் ஓட ஓட விரட்டியது இந்த சிங்கள தேசம்தான். நாட்டின் பிரதம நீதியரசருக்கே இந்தக் கதி என்றால் ஒரு சாதாரண நீதிபதியின் நிலைமை சொல்லிக் காட்ட வேண்டியதில்லை.

பிள்ளையான் போன்றோருக்கு பிணை அனுமதி மற்றும் விடுதலைத் தீர்ப்பு வழங்கியமை குறித்து இலங்கை நீதித்துறையினரின் போக்கு சந்தி சிரிக்கின்றது. சரத் என் சில்வா போன்ற பிரதம நீதியரசர்கள் பண்ணிய திருகுதாளங்களும் அத்தியாயம் அத்தியாயமாகப் பேசப்படுகின்றன.

ஆனால் இவற்றுக்கு மத்தியிலும் ஷிராணி பண்டாரநாயக்கா, சரவணராஜா போன்ற துணிச்சலும், உறுதியும், அடிபணியாத நேர்மையும், சட்டத்தைத் தவிர பிறிதொன்றுக்கும் தலைவணங்காத ஓர்மமும் மிக்க நீதித்துறையினர் இருக்கத்தான் செய்கின்றனர் என்பது மன ஆறுதல் தரும் செய்திதான்.

சுதந்திரமான - சுயாதீனமான - பக்கச்சார்பற்ற - விசாரணைகளுக்கு சிங்கள நீதித்துறையை நம்பவே முடியாது என்ற தமிழர்களின் ஒருமித்த கூற்று மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. அவ்வளவுதான்.

### ஏழு மாவட்டங்களுக்கான

# மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிப்பு

நாட்டில் 7 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, கண்டி, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்று மதியம் 12.30 மணி வரையில் இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி, ஒரு விநாடியில் மூவாயிரம் கனஅடி அளவான நீர் விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு விடுவிக்கப்படுகின்றது.

பொல்கொல்ல நீர்த்தேக்கத்தினை அண்டி வாழும் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு விக்டோரியா நீர்த்தேக்கத்தின் பொறியியலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

## நாடாளுமன்றில் இனித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான விசேட கூட்டம் அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ விடுதலைக் கழகம் (புளொட்), தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ். உள்ளிட்ட கட்சிகளின் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அனைவரும் செயற்பட்டு வந்திருந்த நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலின்போது பிரிந்து நின்றனர்.

தமிழரசுக் கட்சி தனி அணியாகவும், ஏனைய கட்சிகள் வேறு பலரையும் இணைத்துக் கொண்டு புதியதொரு கூட்டமைப்பையும் (ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு) உருவாக்கியிருந்தனர்.

ஆனாலும் நாடாளுமன்றத்தில் இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட்டு வந்த நிலையில் தொடர்ந்தும் அவ்வாறு செயற்பட முடியாது என்பதால் பிறிதொரு அணியாகச் செயற்பட அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர்.

இதற்கமைய அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது தனி அணியாகச் செயற்படப் போவதாகச் சபாநாயகருக்கு அறிவித்தலை வழங்கிவிட்டு இனிமேல் நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றில்லாமல் தனியான அணியாகச் செயற்படுவது என அவர்கள் தீர்மானம் எடுத்துள்ளனர்.

அதேபோன்று எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழர் தரப்பிலிருந்து பொதுவேட்பாளரை இறக்குவது எனவும், இதற்கமைய தமிழர் தரப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடல்களை நடத்துவது எனவும் தீர்மானித்துள்ளனர்

மேலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை அனைத்துத் தரப்பினரும் இணைந்து சந்திப்பதற்கும் அவ்வாறு அனைவரும் ஒருமித்து சந்திப்பது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரியவருகின்றது.

இவ்வாறு சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலும் அதற்கு முன்னெடுக்க நடவடிக்கைகள் தொடர்பிலும் அனைவருமாக இணைந்து ஆராய்ந்து சில தீர்மானங்களை எடுத்துள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

# இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் மலையக மக்கள் முன்னணியுடன் சந்திப்பு



மலையக மக்கள் முன்னணிக்கும் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்"க்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் நேற்று வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன், மலையக மக்கள் முன்னணியின் பிரதி தலைவரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான இராஜாராம், மலையக தொழிலாளர் முன்னணியின் பதில் பொதுச் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பு தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில், நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலுக்கு வருகை தந்திருந்த இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸை மரியாதை நிமித்தம் மலையக மக்கள் முன்னணி சார்பில் சந்தித்தோம்.

இந்தச் சந்திப்பின்போது மலையக அபிவிருத்தி சம்பந்தமாக மலையக கல்வி அபிவிருத்தி தொடர்பாகவும் பல விடயங்களை எடுத்து கூறினோம். அத்தோடு மலையக சமூதாயத்தின் நிலையையும் பற்றியும் விரிவாக தெளிவுபடுத்தினோம். அதேபோல நாட்டினுடைய பல்வேறு பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதில் விசேடமாக நாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இந்த நாட்டுக்கு உகந்ததல்ல எனவும் அவரிடம் வலியுறுத்திக் கூறினோம்.

இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இவ்வாறான சட்டமூலம் இலங்கைக்கு ஏற்றதல்ல. ஜனநாயக நாட்டில் இவ்வாறான சட்டமூலம் கொண்டு வருவது அடக்குமுறைகளை ஏற்படுத்துவதாகும். அதாவது ஊடக அடக்குமுறை, தொழிற் சங்கங்கள் அடக்கு முறைகள், அதே போல மக்களுக்கு துன்பங்களை இந்த சட்டம் மூலம் ஏற்படுத்தும்.

இந்த சட்டமூலம் முழு அதிகாரமும் ஜனாதிபதியிடம் கொடுக்கப்படும் என்பது போன்ற பல்வேறு விடயங்களை அவரிடம் எடுத்துரைத்தோம். அவரும் சில வற்றை ஏற்றுக்கொண்டார். அதற்கு அவர் முழுமையான பதில் கூறாவிட்டாலும், இந்த நாட்டிலே இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிந்து வைத்துக்கொண்டு இவ்வாறு நடைபெறுவது வேதனைக்குரிய விடயம் என்பதை கூறினார் என்று தெரிவித்துள்ளார்.

# 2022 இல் விபத்துக்களால் 400 சிறுவர்கள் உயிரிழப்பு




கடந்த 2022ஆம் ஆண்டில் மாத்திரம் 400 சிறுவர்கள் வீதி விபத்தில் உயிரிழந்துள்ளனர் என இலங்கை மருத்துவ சங்கத்தின் பிரதிநிதி பேராசிரியர் சமத் தர்மரத்ன தெரிவித்துள்ளார்.

வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபையால் 'வேகமாக அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள்' என்ற தலைப்பில் இலங்கை அறக்கட்டளை நிறுவனத்தில் இடம்பெற்ற ஊடக விழிப்புணர்வு சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இலங்கை மருத்துவ சங்கத்தின் பிரதிநிதி பேராசிரியர் சமத் தர்மரத்ன மேலும் தெரிவிக்கையில் –

"வீதி விபத்துக்களால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை இலங்கையில் 30 வருட கால யுத்தத்தின் போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும்.

அரசால் கிட்டத்தட்ட 1.8 பில்லியன் ரூபா அளவில் வீதி விபத்துக்களில் காயமடைந்தவர்களின் சிகிச்சைக்காகச் செலவிடப்படுகின்றது.

2016 முதல் 2018 ஆம் ஆண்டுவரையான வரையான காலப்பகுதியில் வீதி விபத்துக்களால் இலங்கையில் 24 ஆயிரம் 786 பேர் உயிரிழந்துள்ளனர். 20 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர்.

நாளாந்தம் ஏறக்குறைய ஏழு முதல் எட்டு பேர் வீதி விபத்துக்களில் உயிரிழக்கின்றனர். அவர்களில் 60 சதவீதத்திற்கும் அதிகமானோர் மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்கள், பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுபவர்கள் ஆவர்.

இந்த விபத்துக்களில் உயிரிழப்பவர்களில் பெரும்பாளானோர் இளைஞர்களாக காணப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வீதி விதிமுறைகளை அமுல்படுத்தினால் வீதி விபத்துகளை 10 சதவீதம் குறைக்க முடியும்.

வீதி விபத்துகளை குறைக்க முடியவில்லை என்றால், எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும். வீதி விபத்துகளை விரைவாகக் கட்டுப்படுத்த நடைமுறைகளை கையாள வேண்டும், இல்லையெனில் அவை சமூக மற்றும் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும்." – என்றார்.

# உலகளாவிய சவால்களுக்கு முகம்கொடுக்க சர்வதேச கலந்துரையாடல் மிகவும் அவசியம்

## 'பேர்லின் குளோபல்' நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு










2024 ஆம் ஆண்டு உலகளாவிய சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வலுவான சர்வதேச திட்டமிடலுக்காக மேற்குலக நாடுகளும், ஐக்கிய அமெரிக்காவும், ஐரோப்பிய சங்கமும் சீனாவுடன் தீர்மானமிக்க கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

அதேபோல் 'ஓரே தீர்மானம் – ஒரே பாதை' என்ற கூட்டு வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை போன்ற நாடுகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதோடு, இதனால் உலக பொருளாதார நெருக்கடிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் இலங்கை போன்ற நாடுகள் அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளிலிருந்து வரும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க பழகியுள்ளன எனவும் அது புதியதொரு விடயமல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியின் பேர்லின் நகரில் நேற்று நடைபெற்ற 'பேர்லின் குளோபல்' மாநாட்டின் முதல் நாளில் அரச தலைவர்களுக்கான கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகள் இலங்கைக்கு வழங்கியிருந்த ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

இந்த மாநாட்டில், ஜேர்மன் சான்ஸலர் ஒலாப் ஸ்கொல்ஸ், பெல்ஜியம் பிரதமர் அலெக்சாண்டர் டீ குரூ, கசகஸ்தான் ஜனாதிபதி கெசெம் – ஜோமார்ட் டோகயெவ், ஐரோப்பிய கவுன்ஸில் தலைவர் சார்ள்ஸ் மிஷெல் உள்ளிட்டவர்களுடன் பல நாடுகளின் தலைவர்கள், வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் உலகளாவிய ரீதியிலுள்ள பொருளாதார கொள்கை மற்றும் நிதிமயமாக்கல் நிபுணர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேபோல் இந்த கலந்துரையாடலில் உலகின் முக்கிய நிறுவனங்கள் பலவற்றின் நிறைவேற்று அதிகாரிகளும் பங்குபற்றவுள்ளனர்.

பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் போது, அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கும் இடையிலான வேறுபாடுகளே இறையாண்மைக் கடன் நெருக்கடிகளுக்கு காரணமாக அமைந்துள்ளது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அபிவிருத்தி அடைந்துவரும் பல நாடுகள் எதிர்கொண்டுள்ள குறிப்பிடத்தக்க அளவிலான கடன் நெருக்கடி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற தற்போதை பொறிமுறைகளில் காணப்படும் கட்டுப்பாடுகள் தொடர்பில் கருத்தில் கொண்டு மேலும் நெருக்கடி நிலைமைகள் உருவாவதைத் தவிர்ப்பதற்கான அவசர வேலைத்திட்டங்கள் அவசியம் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, ஜனாதிபதியின் பிரத்தியேகச் செயலாளர் சென்ரா பெரேரா ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# கோயம்புத்தூர் கார் குண்டு வெடிப்பு: கைதான இருவரிடம் தீவிர விசாரணை





தமிழகத்தின் கோயம்புத்தூரில் கடந்த வருடம் நடைபெற்ற கார் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மேலும் இரண்டு சந்தேகநபர்கள் கோயம்புத்தூருக்கு அழைத்துச்செல்லப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் இது வரை 13 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழகத்தின் கோவை – உக்கடம், கோட்டை ஈஸ்வரன் கோவிலுக்கு அருகில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கார் குண்டு வெடிப்பு இடம்பெற்றிருந்தது.

இந்த சம்பவத்தில் உக்கடத்தை சேர்ந்த ஜமேஷா முபின் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார்.

இந்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியதுடன், விசாரணைகளில் ஜமேஷா முபின் தனது சகாக்களுடன் சேர்ந்து பயங்கர சதித்திட்டத்தில் ஈடுபட்டார் தெரியவந்தது.

இதையடுத்து, தமிழக பொலிஸார் இந்த வழக்கில் தொடர்புடைய 6 பேரை கைது செய்தனர்.

தொடர்ந்து வழக்கு என்.ஐ.ஏ. எனப்படுகின்ற இந்தியாவின் தேசிய புலனாய்வு முகவர் நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டதோடு, பின்னர் ஐந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

விசாரணைகளின்போது அண்மையில், உக்கடம் ஜி.எம். நகரை சேர்ந்த முகமது இத்ரீஸ், உக்கடம் அன்பு நகரை சேர்ந்த முகமது அசாருதீன் ஆகியோர் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

முகமது அசாருதீன் ஐ.எஸ். ஆதரவு வழக்கு தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்டு, கேரளா மாநில சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்களையும் தேசிய புலனாய்வு முகவர் நிலைய அதிகாரிகள் கோயம்புத்தூருக்கு அழைத்துச்சென்று நேற்று முன்தினம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட ஏப்ரல் 21 பயங்கரவாத குண்டுத் தாக்குதலை முன்னெடுத்த குழுவின் தலைவரான சஹ்ரான் ஹாசிமுடன் 2019 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே சந்தேகநபர்களில் ஒருவரான முகமது அசாருதீன் என்பவர் தொடர்புகளை பேணியுள்ளார் என இந்திய பாதுகாப்பு தரப்பினரை மேற்கோள்காட்டி இந்திய ஊடகங்கள் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தன.

கோயம்புத்தூர் கார் குண்டு வெடிப்பில் உயிரிழந்த ஜமேஷா முபின் என்பவருக்கும் சஹ்ரான் ஹாசிமிற்கும் இடையில் தொடர்புகள் இருந்துள்ளன என இந்திய ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

# பயங்கரவாதிகளுக்கு புகலிடம் வழங்கும் கனடா

## – இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தகவல்

இந்தியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பயங்கரவாதிகளுக்கு கனடா புகலிடம் அளித்து வருகிறது என இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் குற்றச்சாட்டியுளார்.

நியூயோர்க் நகரில் இடம்பெற்ற வெளியுறவுக்கான பேரவை கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், கனடா பிரதமர் கூறியுள்ள குற்றச் சாட்டுக்கு ஏற்கனவே நாங்கள் பதிலளித்து விட்டோம். இது போன்று கொலை செய்வது இந்தியாவின் கொள்கை அல்ல.

இதில் இந்திய அரசுக்கு தொடர்பு உள்ளது என ஏதாவது குறிப்பிட்ட சிறிய ஆதாரம் இருந்தாலும் அதை கொடுக்கலாம். அதை, இந்திய உரிய முறையில் கவனிக்கும் என தெரிவித்துள்ளோம். எந்த ஒரு முகாந்திரமும், ஆதாரமும் இல்லாமல் இது போன்ற புகார் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக கனடாவில், பிரிவினைவாத அமைப்புகளால் திட்டமிட்டு குற்றங்கள், வன்முறைகள், பயங்கரவாத சம்பவங்கள் நடந்துள்ளன.

இது தொடர்பாக குறிப்பிட்ட தகவல்கள், ஆதாரங்கள், முன்னெச்சரிக்கைகளை கனடாவுக்கு நாங்கள் வழங்கி உள்ளோம். கனடாவில் இருந்து இயங்கி வரும் பயங்கரவாத அமைப்புகள், அதன் தலைவர்கள் குறித்த தகவல்களையும் அளித்துள்ளோம்.

அவர்களை நாடு கடத்துவதற்கான கோரிக்கைகளையும் அளித்துள்ளோம். கனடாவில் உள்ள நிலவரங்களை முழுமையாக பார்க்க வேண்டும்.அங்கு சில அரசியல் நிர்ப்பந்தங்கள் உள்ளன.

பயங்கரவாத அமைப்புகள் குறித்து நாம் குறிப்பிட்டால் தங்கள் தரப்பை நியாயப்படுத்தி கனடா பேசுகிறது.

இந்தியாவின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பயங்கரவாதிகளுக்கு கனடா புகலிடம் அளித்து வருகிறது. அவர்கள் இது தொடர்பான எந்த நடவடிக் டீகையையும் எடுக்காதது ஏன்? என்று அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னிப்புக் கோரினார் கனடா பிரதமர் ட்ரூடோ



இரண்டாம் உலகப்போரின் போது ஹிட்லரின் நாஜிப் படையில் முக்கிய பொறுப்பு வகித்த ஒருவரை நாடாளுமன்றில் வைத்து கௌரவித்தமை தொடர்பில் கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மன்னிப்பு கோரியுள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடன் கடந்த 22 வந்திருந்த 98 வயதான போர் வீரர் யாரோஸ்லாவ் ஹுன்கா கனடா நாடாளுமன்றத்தில் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் 2 ஆம் உலகப்போரின்போது ஹிட்லரின் நாஜிப் படையில் முக்கிய பொறுப்பு வகித்தவர் என்றும் லட்சக்கணக்கான யூத மக்கள் உயிரிழக்க காரணமானவர் எனவும் தகவல் பரவியது.

அதனை தொடர்ந்து அவரை கௌரவித்தமை தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மன்னிப்பு கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த விவகாரம் கனடா நாடாளுமன்றத்தை முழுவதுமாக தர்ம சங்கடத்திற்கு உள்ளாக்கி இருக்கிறது, இந்த நிகழ்வுக்கு வருந்துகிறேன்.

அப்போதைய சூழலை அறியாமல் யூத மக்களின் நினைவுகளை மீறியதற்கு மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சர் உக்ரைனுக்கு திடீர் பயணம்



பிரித்தானியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ், நேற்று உக்ரைனுக்கு திடீர் பயணத்தை மேற்கொண்டு உக்ரைனிய ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

எதிர்வரும் குளிர்காலத்துக்கு முன்னர் உக்ரைனின் வான் பாதுகாப்பை வலுப்படுத்துவது குறித்தும் இருவரும் தீவிரமாக விவாதித்துள்ளனர் என தெரியவருகிறது.

தெற்கு உக்ரைனில் ரஷ்யா கடுமையான வான்வழித் தாக்குதலை நடத்தியது. இந்த நிலையிலும், உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சகத்தின் அண்மைய முறைகேடுகள் குறித்த செய்திகளின் பின்னணியில் பிரித்தானியாவின் புதிய பாதுகாப்பு அமைச்சர் கிராண்ட் ஷாப்ஸ், நேற்று உக்ரைனுக்கு திடீர் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

உக்ரைனிய பாதுகாப்பு அமைச்சகத்தில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக பல அதிகாரிகள் பணிநீக்கம் செய்யப்பட்டு புதிய நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது புதிதாக உக்ரைனுக்கு பாதுகாப்பு துணை அமைச்சர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளார் என புதிய பாதுகாப்பு அமைச்சர் அறிவித்துள்ளார்.

உக்ரைனிய இராணுவத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளைத் தொடர்ந்து இந்தத் தலைமை மாற்றங்கள் உருவாக்கப்படும் நிலையில் பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சரின் இந்த திடீர் பயணம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, பிரித்தானியா வழங்கும் ஒத்துழைப்பால் உக்ரைனிய இராணுவம் போர்க்களத்தில் தனது திறமைகளை கணிசமாக விரிவுபடுத்தி வருகிறது என ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய பாதுகாப்பு அமைச்சரின் உக்ரைனிய பயணத்தின் பின்னணியில் ரஷ்யாவின் தனியார் இராணுவக் கட்டமைப்பான வாக்னரின் துருப்புகள் மீண்டும் உக்ரைனிய போர்க்களத்திற்குத் திரும்பியுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

# கனடா சபாநயகர் பதவி விலகினார்!



கனடா நாடாளுமன்ற சபாநயகர் ஆண்டனி ரோட்டா பதவி விலகியுள்ளார். நாஜி வீரருக்காக தலைவணங்கிய விவகாரத்தில் கடும் விமர்சனம் எழுந் ததையடுத்து, அவர் பதவி விலகியுள்ளார் என கூறப்படுகின்றது.

உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி, கடந்த வாரம் கனடா சென்றார்.

இதன்போது, கனடாநடாளுமன்றில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் ஜெர்மனிய சர்வாதிகாரி அடல்ட் ஹிட்லரின் நாஜிப்படை வீரருக்கு, பிரதமர் ட்ரூடோ உட்பட அனைவரும் எழுந்து நின்று தலைவணங்கி மரியாதை செலுத்தினர். இதனால் அவர்கள் கடும் விமர்சனத்திற்குள்ளானார்கள்.

இந்த விவகாரத்தில் நாடாளுமன்ற சபாநாயகர் ஆண்டனி ரோட்டாவும் கடும் விமர்சனத்திற்கு ஆளானார்.

இதையடுத்து சபாநாயகர் பதவி விலகப்போகிறேன் என்று அறிவித்திருந்தார். இதனையடுத்து துணை சபாநாயகர் தற்காலிக சபாநாயகராக பொறுப்பேற்றுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

# பனைசார் உற்பத்திகளின் கண்காட்சி வவுனியாவில்





வவுனியவில் பனைசார் பொருள்கள் உற்பத்திக் கண்காட்சி நேற்று இடம்பெற்றது.

பனை அபிவிருத்திச் சபையின அனுசரனையுடன் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு பனைசார் பொருள்கள் உற்பத்தி பயிற்சி வவுனியாவில் நடைபெற்றிருந்தது.

இதன் கண்காட்சி நெளுக்குளத்தில் உள்ள பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் கிருஷாந்த பத்திராஜ கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது மரநடுகை மற்றும் பனம் விதை, நாற்று நடுகை போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# ஸ்ரீலங்கன் விமான சேவைகள் தாமதம்

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு சொந்தமான இரண்டு விமானப் பயணங்கள் நேற்றுத் தாமதமாகின.

அத்துடன், மற்றுமொரு விமானப் பயணத்தை இரத்துச் செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷ் தலைநகரான டாக்கா நோக்கி பயணிக்கவிருந்த யூ.எல். 189 இலக்க விமானம், தொழில்நுட்ப கோளாறுக்குள்ளானமையினால் பயணத்தை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது என ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த விமானப் பயணம் தாமதமடைந்தமையினால், பாகிஸ்தான்நோக்கி பயணிக்கவிருந்த யூ.எல். 153 இலக்க விமானப் பயணத்தை இரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்தியாவின் சென்னை நோக்கி பயணித்த யூ.எல். 141 இலக்க விமானத்தை தரையிறக்குவதில் நேற்று காலை தாமதம் ஏற்பட்டது.

சென்னை விமான நிலையத்தின் ஓடுபாதையில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது என ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.




# வாகன வரி அனுமதிப்பத்திரம் வழுங்கல் புதிய முறைமையில்!

வாகன வரி அனுமதிப்பத்திரத்தை (வாகன வருமான உத்தரவுப் பத்திரம்) வழங்கும் புதிய முறைமை எதிர்வரும் ஒக்டோபர் 3ஆம் திகதி முதல் நாட்டின் 8 மாகாணங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, வடமேல், தெற்கு, வடமத்திய, மத்திய, சப்ரகமுவ, கிழக்கு, வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் முதலில் இந்தப் புதிய முறைம்சி நடைமுறைப்படுத்தப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் தற்போது நடைமுறையில் உள்ள வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமை (eRL 1.0) தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தலைமை அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களினால் வாகன வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடு நேற்றைய தினமும் எதிர்வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதியும் தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன், இணையம் மூலமாக வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் வசதியும் எதிர்வரும் ஒக்டோபர் 6 ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் (ICTA) மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களங்களின் ஆதரவுடன் தற்போதைய வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கும் முறைமையை நவீனமயமாக்கும் பணிகளை மேற்கொண்டுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள வாகன வரி அனுமதிப்பத்திரம் வழங்கல் முறைமையானது கடந்த 2009 ஆம் ஆண்டு டிசம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பெரும்போகத்திற்கு நீர் வழங்கல் அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகும்

பெரும்போகத்திற்கான நீரை எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் திறந்துவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மகாவலி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

முதலில் கலா வாவி ஊடாக யோத கால்வாய்க்கு நீர் திறந்துவிடப்படும் என மகாவலி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் நிலந்த தனபால தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் மகாஇலுப்பல்லம, கட்டியாவ, கலா வாவி, இபலோகம ஆகிய பகுதிகளுக்கு நீர் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன், நவம்பர் முதலாம் திகதி முதல் மகாவலி அதிகாரசபைக்கு உட்பட்ட அனைத்து பிரதேசங்களுக்கும் நீர் திறந்துவிடப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

உங்கள் வாழ்க்கையை ஆரோக்கியமான, வெற்றிகரமான வாழ்க்கையாக வாழ

sky Yoga

மனவளக்கலை
sky Yoga
நான்கு நாள் சிறப்பு பயிற்சி நெறி

செப். 28 முதல் ஒக்.01 ஆம் திகதி வரை | நேரம் : 09.00 - 12.00

தொடர் விடுமுறை நாட்களை முன்னிட்டு இலங்கை மனவளக்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ்நாட்டு பயிற்றுவிப்பாளர்களால் நடாத்தப்படும்
sky Yoga ஆரம்ப நிலை பயிற்சிகள்
(Sky Yoga Foundation Course )



- எளிமையான யோகாசனப் பயிற்சிகள் ( Simplified Yoga Asanas )
- தியான பயிற்சிகள் ( Meditation )
- காயகல்ப பயிற்சிகள்

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மாத்திரம்

இடம் :
கொழும்பு அறிவுத்திருக்கோயில்
sky Yoga Center
53 - 1 / A, இராமகிருஷ்ண வீதி, வெள்ளவத்தை,
கொழும்பு 06.

தொடர்புகளுக்கு :
0779 371 846
0777 364 885
0774 951 607



# கிழக்கு மெய்வல்லுநர் போட்டிகளில் பட்டிருப்பு வலயம் முதலிடம்



(அ.அஸ்வர்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் போட்டிகளில் மட்டக்களப்பு மாவட்ட பட்டிருப்பு கல்வி வலயம் 179 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வென்றுள்ளது.

திருகோணமலை கந்தளாய் லீலா ரத்தின விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று நிறைவடைந்த இந்தப் போட்டியில் முதலிடம் பெற்ற பட்டிருப்பு கல்வி வலயத்தில் செட்டிபாளையம் மகா வித்தியாலயம் 9 தங்கப் பதக்கங்களையும் களுதாவளை மகா வித்தியாலயம் 8 தங்கப் பதக்கங்களையும் வென்றெடுத்துள்ளன. அம்பாறைமாவட்ட திருக்கோவில் கல்வி வலயம் மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயங்கள் தலா 92 புள்ளிகளைப் பெற்றன.

# கல்முனை அஸ் ஸம்ஸ் விளையாட்டுக்கழக சீருடை அறிமுகமும் கிரிக்கெட்போட்டியும்






(எம்.எம்.றம்ஸீன்)

கல்முனை அஸ் ஸம்ஸ் விளையாட்டுக்கழக சீருடை அறிமுக கிரிக்கெட் போட்டியில் கல்முனை யங் பேர்ட் அணி வெற்றிபெற்றது.

கல்முனை அஸ் ஸம்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுகம் செய்யும் கிரிக்கெட் போட்டி கல்முனை யங் பேர்ட்ஸ் விளையாட்டுக் கழகத்துடன் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கல்முனை அஸ்-ஸம்ஸ் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கல்முனை அஸ்-ஸம்ஸ் விளையாட்டுக் கழகம் 17.5 ஓவர்கள் எதிர்கொண்ட நிலையில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 81 ஓட்டங்களைச் சேர்த்தது.

அஸ்-ஸம்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகூடிய ஓட்டமாக 22 ஓட்டத்தை இர்ஸாத் பதிவு செய்தார். பந்துவீச்சில் இபாத் 4 ஓவர்கள் வீசி 3 விக்கட்டுகளைக் கைப்பற்றினார்.

பின்னர் 82 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய கல்முனை யங் பேர்ட்ஸ் விளையாட்டுக்கழகம், 17.5 ஓவர்களை எதிர்கொண்டு 5 விக்கட்டுகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

கல்முனை யங் பேர்ட்ஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக பிராஸ் 34 ஓட்டங்களைப் பெற்று போட்டியின் சிறந்த வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

பந்துவீச்சில் நிப்ராஸ் 4 ஓவர்கள் வீசி 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.



# மூன்றாவது தடவையாகவும் சம்பியனானது ஈஸ்வரா

(எம்.எம்.ஜெஸ்மின்)

சொறிக்கல்முனை சாந்தகுரூஸ் விளையாட்டுக் கழகத்தின் 48ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் ஈஸ்வரா விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

27 அணிகள் பங்கேற்ற இப்போட்டியில் ஈஸ்வரா அணி, மண்டூர் எப்.ஸி. அணியை இறுதிப் போட்டியில் சந்தித்து, அதிலும் வெற்றிபெற்று முதலாம் இடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் சிறந்த வீரராக ஈஸ்வரா கழக வீரர் தேவதர்ஷனும், சிறந்த கோல் காப்பாளராக ஈஸ்வரா கழக வீரர் சரணிஷனும், சிறந்த பின்கள வீரராக ஈஸ்வரா கழக வீரர் துஷ்யந்தனும் தெரிவு செய்யப்பட்டனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக, சாந்தகுரூஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டத் தொடர்களில் ஈஸ்வரா விளையாட்டுக் கழகமே வெற்றி வாகை சூடியமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை வலய மட்டசிறுவர் விளையாட்டில் முதலிடம்

# மாணவர்கள் கௌரவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை வலய மட்டசிறுவர் விளையாட்டுப் போட்டியில், சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்ரப் வித்தியாலயம் முதலாம் இடத்தைச் சுவீகரித்து கிழக்கு மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. இதையடுத்து வெற்றி பெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் நடைபெற்ற சிறுவர்களுக்கான வலய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஸ்றப் வித்தியாலயம் சார்பாக கலந்து கொண்ட தரம் 3 , தரம் 4 ஆண் – பெண் கலப்பு அணிகள் இரண்டும் கல்முனை வலய மட்டத்தில் முதலாம் இடங்களைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டன.

வெற்றி பெற்ற மாணவர்களையும், பயிற்றுவித்த ஆசிரியர்களான உடற்கல்வி பொறுப்பாசிரியர் எம்.எப்.றிபாஸ் மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் என்.எம்.ஏ.ஆபாக் ஆகியோரை பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் உள்ளிட்ட கல்வி சமூகம் பாராட்டி கௌரவித்தது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.09.2023

## மேஷம்

இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. இன்று உங்களிடம் எதையோ இழந்தது போன்ற உணர்வு இருக்கும் என்பதால் பொறுமை அவசியம் மேற் கொள்ள வேண்டும்.

நீங்கள் பணி செய்யும் விதத்தை திட்டமிட வேண்டும். கவனமாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டியது இன்று அவசியம்.

மகிழ்ச்சி யின்மை காரணமாக உங்கள் துணையிடம் குறைந்த புரிந்துணர்வு காணப்படும். உங்கள் மன நிலையை மாற்றிக் கொண்டு நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். பண இழப்பை சந்திக்க நேரலாம். இது உங்களுக்கு கவலை ஏற்படுத்தும். நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும்.

தூக்கமின்மை மற்றும் பதட்டம் காரணமாக இன்று கால் வலி காணப்படும்.

## ரிஷபம்

இன்று உங்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கும் நாள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பது நல்லது. நீங்கள் நல்ல நேரத்தை கொண்டாடி மகிழலாம்.

இன்று உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டிய சூழல் காணப்படும். உங்கள் மேலதிகாரிக ளின் ஆதரவு மற்றும் பாராட்டு பெறுவீர்கள். பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

நிதி நிலைமையில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு உயரும். நிதி நிலையில் சுதந் திரம் காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்று உங்கள் கடின உழைப்பிற் கான பலன்களைக் காண்பீர்கள். இன்று முன்னேற்றங்கள் கிடைக்கும். மொத் தத்தில் நல்ல பலன் கிடைக்கும் நாள்.

இன்று நீங்கள் சிறப்பாக பணி புரிவீர் கள். பணியிடத்தில் முன்னேற்றம் காணப்படும். புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படலாம்.

உங்கள் துணையுடன் நல்லுறவை வளர்த்துக் கொள் வீர்கள். உங்களின் அனுசரணையான போக்கின் மூலம் இது சாத்தியம்.

நிதி நிலையில் சிறப்பான முன்னேற்றம் காணப்படும். கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். மகிழ்ச்சி காணப் படும்.

ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை இன்று சிறப்பாக இருக்கும். உங்களின் திருப்தியான மன நிலை காரண மாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## கடகம்

வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் அமைதி காண்பீர்கள். உங்கள் செயல்களில் உணர்வுப் பூர்வமாக செயல்படுவதை விட யதார்த்தமாக செயல்படுவது நல்லது. எல்லாவற்றிலும் அமைதியான அணுகுமுறை தேவை.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணிகளில் தவறுகள் நேராதபடி இன்று நீங்கள் சிறப்பாக பணியாற்ற வேண்டும். உங்கள் பணிகளை முறைப் படுத்தி செய்யகற்க வேண்டும்.

உங்கள் துணையிடம் கடுமையாக நடந்து கொள்வீர் கள். நட்பாக நடந்து கொண்டு நல்லுறவை வளர்த்துக் கொள்வது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகள் செய்ய நேரும். எனவே செலவுகளை கட்டுப் படுத்த வேண்டும்.

## சிம்மம்

ஏழைகள் மற்றும் உடல் ஊன முற்றோருக்கு பண உதவி செய்ய இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதனால் மகிழ்ச்சியாக இருப்பது போல உணர்வீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். நீங்கள் பணிகளை திட்டமிட்டு மேற்கொண்டால் நல்ல பலன் கிடைக்கும். சக பணியாளர்களால் சில தொல்லைகளை சந்திக்க நேரலாம்.

உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்க்கவும். இதனால் சில விரும்பத்தகாத சூழ்நிலையை தவிர்க்க லாம். நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். அதிக பொறுப்பு கள் காரணமாக செலவுகள் அதிகமாக இருக்கும்.

அதிகமாக வருத்திக் கொள்வதன் காரணமாக இன்று உங்களுக்கு முதுகுவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனதில் சமநிலை உணர்வு காணப்படும். முக்கிய முடிவுகள் இன்று நல்ல பலன் தரும். உங்கள் தன்னம்பிக்கை நிலை அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பணியிடத்தில் உற்சாகமான நிகழ்சிகள் நடக்கும்.

உங்கள் துணையுடன் நட்பாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கின் காரணமாக இருவரிடையே வலுவான பிணைப்பு ஏற்படும்.

நீங்கள் அதிக பணம் சம்பாதிப்பீர்கள். இந்த வளர்ச்சி உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

உங்களிடம் அதிக உறுதி காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

## துலாம்

இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்றைய நாளை நீங்கள் பயனுள்ள வகையில் பயன்படுத் திக் கொள்ளலாம். இன்று பல சௌகரி யங்களை நீங்கள் உணரலாம்.

நீங்கள் செய்யும் பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல தொடர்பு கொண்டிருபீர் கள். இதனால் அவரிடம் மகிழ்ச்சி காணப்படும். நீங்க ளும் உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் தேவைகளை சிறிய கடன் மூலம் பூர்த்தி செய்து கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஸ்திர மான ஆரோக்கியம் காணப்படும்.

## விருச்சிகம்

இன்று மிதமான பலன்களே கிடைக் கும். இன்று நற்பலன்கள்காண நீங்கள் யதார்த்தமான அணுகுமுறை மேற் கொள்ள வேண்டும். சுய முயற்சி நல்ல பலன் தரும்.

உங்கள் பணியில் நீங்கள் கவன மாக இருக்க வேண்டும். பணிகளை கவமாகக் கையாள நீங்கள் பணி சார்ந்த முறையில் திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உங்கள் இருவரிடையே தவகல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

நீங்கள் விரும்பும் பணம் உங்களுக்கு கிடைக்காது. இறுதியில் கடன் வாங்குவீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதட்டம் காரணமாக கால் வலி காணப்படும். அமைதி யாக இருப்பது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் -29.09.2023




இன்று முக்கிய முடிவுகள் எதுவும் எடுக்க வேண்டாம். உங்கள் செயல்களில் சிறிது கவனம் தேவை. இன்று நீங்கள் உணர்ச்சி வசப்படலாம். அதனை தவிர்ப்பது நல்லது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது ஏமாற்றங்களையும் தடைகளையும் சந்திப்ப-ீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு பயனுள்ளதாக இருக்காது. நீங்கள் பணிகளை முன்னுரிமைப் படுத்தி தக்க நேரத்தில் முடிக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அமைதியற்ற உணர்வு காண்பீர்கள். எனவே எதையும் எளிதாக எடுத்துக் கொண்டு நட்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பணம் பற்றிய கவலை காணப்படும். அதிக செலவுகள் உள்ள காரணத்தால் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் சீராகச் செல்லும். மகிழ்ச்சியும் திருப்தியும் காணப்படும். இன்று நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். இதனை உங்கள் முன்னேற்றத்துக்கு நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

நீங்கள் உங்கள் உறவுமுறையில் ஆர்வமுடன் இருப்பீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையே திருப்தி காணப்படும்.

உங்களிடம் அதிக பணம் காணப்படும். உங்களிடம் உற்சாகமான அணுகுமுறை காணப்படும். நல்ல முன்னேற்றம் காண்பீர்கள்.

இன்று மனதில் அமைதியையும் நேர்மறை ஆற்றலையும் உணர்வீர்கள்.




உங்கள் பணிகளை முடிக்க இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்களின் வளர்ச்சி உறுதி. நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் நல்ல முடிவுகளை எடுக்க இயலும்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள். தரமான பணிகளை வழங்குவீர்கள்.

உங்கள் துணையிடம் பேசுவதை மகிழ்ச்சியாக உணர்வீர்கள். இருவரும் இணைந்து நேரத்தை சிறப்பாக கழிப்பீர்கள்.

நிதி நிலைமை பாதுகாப்பாக இருக்கும். பணத்தை பொறுத்தவரையில் பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.




உங்கள் செயல்களை நீங்கள் சுமூகமாக மேற்கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று நீங்கள் நம்பிக்கை இழக்க நேரலாம். எனவே உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். சக பணியாளர்களுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை.

உங்கள் இருவரிடையே இருக்கும் கருத்து வேறுபாடு காரணமாக உங்கள் துணையுடன் திருப்தி குறைந்து காணப்படும். உறவில் நல்லிணக்கம் பேண இருவரும் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.





